தொகுதி- ௫௬ Vol. 56

பகுதி- ௪ No. 4

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1991

சார்வரி—ஆடி

JULY-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. சிலம்பில் ஒரு பரல் 97
சுப. மணிமொழியன் B. A. (Hons)

2. இளம்பூரணர் எழுத்துரை 110
ஆ. சிவலிங்கனர், மயிலம்.

3. இருவேறுலகத்தியற்கை 115
வெ. சி. சீனிவாசன்

4. சங்கச் செய்திகள் 124

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L C.

2. திரு. சித்தாந்தகலாநிதி, பேராசிரியர், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனர் M. A. L. T. M. O. L. Ph. D
சென்னை.

4. திரு. பேராசிரியர், பி. சோமுமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர்,
தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ௫௬ Vol. 56	திருவள்ளுவர் ஆண்டு 1991 சார்வரி—ஆடி 1960 — July	பகுதி. ௪ No. 4

72-ஆம் பக்கத் தொடர்ச்சி

சிலம்பில் ஒரு பரல்

சு.ப. மணிமொழியன், B. A. (Hons.)

"If music be the food of love, play on;
Give me excess of it, that, surfeiting,
The appetite may sicken, and so die."

— (*Twelfth Night I, I*)

"The man that hath no music in himself,
Nor is not moved with concord of sweet sounds,
Is fit for treasons, stratagems and spoils."

— (*Merchant of Venice V, I*)

என்று சேக்சுபியர் இசையைப்பற்றிச் சொல்லும் கருத்துக்களும்,

"………உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச்சூழல் புக்கோ
இறைவா! தடவரைத் தோட்கு என்கொலாம் புகுந்தெய்
தியதே"

— (திருக்கோவையார்)

என்றும்,

"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?" என்றும் பிற தமிழ் இலக்கியங்கள் இசையைப்பற்றிச் சொல்லும் கருத்துக்களும், இசைக்கும் உளவியலுக்கும் உள்ள தொடர்பைக் கூறும் சிலம்புச் செய்தியை வலியுறுத்துவனவாக உள்ளன. துன்பஞ் சூழ்ந்த உள்ளத்தினின்று துளி நேரமாயினும் விடுதலை பெற்றிருப்பதற்குத் துணை செய்வது இசை என்பதாலே, கோவலன் இந்நிலையிலும் யாழிசைக்கின்றான்.

இயற்கையை ஆழ்ந்து நோக்கி ஆசிரியனாகக் கொள்ளுபவர் மன வளம் பெற்று வாழ முடியும் என்னுங் கருத்தை இளங்கோவால் தெரிந்துகொள்கின்றோம். மக்கள் தம் நிகழ்ச்சிகளின் இடையிடையே இயற்கைநிகழ்ச்சிகளைப்பற்றியும் கூறுகையில், அவற்றைப் பொருளில்லா வெறும் கட்டுரை (Description) என்று தள்ளிவிடல் இயலாது. இயற்கையைக் காண்கின்றார். அதனை வியக்கின்றார். மக்கள் வாழ்வோடு இணைக்கின்றார். இணைப்பதால் வாழ்வை வளப்படுத்துகின்றார். புறஞ்சேரியிறுத்த காதையில் இளங்கோவின் இத்தகைய திறப்பாட்டினை நன்கு காண முடிகின்றது, கோவலனும் கண்ணகியும் வையை ஆற்றைக் கடந்து செல்லும் காட்சியை இளங்கோ காட்டுகையில் வையைக் காட்சியையும் சொல்லி, நம் உள்ளத்தைப் பிணிக்கின்றார். கோவலன் கண்ணகியர் நிலைக்காக மக்கள் உள்ளங்கள் வருந்தாதிருத்தல் முடியாது என்பதையும் - வருந்தாவிடினும் வருந்த வேண்டும் என்பதையும் சொல்ல வையையாற்றைப் பயன்படுத்துகின்றார். கரையிலுள்ள சோலைமலர்கள் உதிரப்பெற்றுக் காட்சியளிக்கும் வையை, கண்ணகி நிலைக்காகக் கண்ணீர் சுரந்து அதனை வெளிப்படுத்தாது அடக்குதல்போலுள்ளது என்று நாடகக் குறிப்புமொழி (Dramatic Irony)யால் நவில்கின்றார். இன்னும் சின்னாட்களில் கோவலன் மதுரையில் இறந்துபட்டுக் கண்ணகி துயரில் மூழ்கவிருக்கின்றாள் என்னும் பின்வினை நிகழ்ச்சியைக் குறிப்பாக முன்மொழிபவர், வையையாற்றை ஒரு பெண்ணாக உருவகம் செய்கின்றார். கோவலன் மாதவியோடிருந்து குலவி இன்புற்றவன். அவளிடத்தில் உள்ள இன்பத்தைத் துறந்து கண்ணகியிடம் வரும்போதும் கண்ணகி அவனோடு

இல்லறம் நிகழ்த்தி இன்பம் பெற இயலவில்லை. கோவலன் வந்த வுடனே மதுரை செல்லல் நேர்கின்றது. இடையிலே சிலகாலம் இன்புற்ற கோவலனைவிட வாழ்வு முழுமையும் துன்பத்தையே காணும் கண்ணகியிடத்தே இரக்கம் பிறக்கின்ற உளவியல், உலகோர் பாராட் டும் ஒழுக்கத்தில் உயர்ந்த பெண்ணுக்குத்தான் நன்கு தெரிந்தமையும் என்பதற்காகவே, வையையைப் பெண்ணாகவும் உருவகம் செய்து, அவ் வையைப் பெண் கண்ணகிக்காக வருந்துதல்போல் உள்ளதென்பதை,

''உலகுபுரந் தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யாறு அன்றிது பூம்புனல் யாறென''

எனும் அடிகளில் கூறுகின்றார். கோவலன் கண்ணகியர்க்கு எதிர்ப் படும் இன்னலை முன்னரே குறிப்பாகக் காட்டிச் செல்ல இயற்கை நிகழ்ச்சிகளின் துணையை இயலும் வகையிலெல்லாம் பெறுகின்றார் என்பதைப் புறஞ்சேரியிறுத்த காதை நன்கு தெரிவிக்கின்றது. வையை யாற்றைக் கடக்கையிலும் வையை வருந்துதல் போல் உள்ளது என்ப வர், வையையைக் கடந்து புறஞ்சேரிக்கண் தங்க வருகையிலும்,

''கருநெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்
தையலும் கணவனும் தனித்துறு துயரம்
ஐயம் இன்றி அறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்கியது''

என்று நோதிறமாகக் (Pathetic fallacy) கூறுகின்றார். அவர்களைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களுமே, நெருங்கிக் கொண்டிருக்கும் அவர்கள் துயர் நிலைக்காக வருந்துதல் போல் உள்ளன என்பதை,

''போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல்என் பனபோல் மறித்துக் கைகாட்ட''

என்பதன் வாயிலாகவும் காட்டுகின்றார்.

துன்பியலில், முடிவு நிகழ்ச்சி, நாடகம் முழுமையிலும் மறைந்து வெளிப்படும் (In tragedy, the Conclusion (mostly a death) is Foreshadowed through the whole play) என்னும் இலக்கணப்படி துன்பியல் நாடகமான சிலம்பில், இறுதி முடிவு தொடக்கத்திலிருந்தே மறைந்து கிடக்கின்றது. கோவலன்-கண்ணகி மணவிழாவில் எழும் வாழ்த்தை,

> "காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்
> தீதறு கெனவேத்திச் சின்மலர் கொடுதூவி"

என்று மங்கலவாழ்த்துப்பாடலிலும், கோவலன் மாதவியை விட்டுப் பிரிகையில்,

> " உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய் "

என்று கானல் வரியிலும்; மாதவியை விட்டுக் கண்ணகியிடம் வந்து கொண்டிருக்கையில்,

> "கடுக்குமென் நெஞ்சம் கனவினால் என்கை
> பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டோம்
> பட்ட பதியில் படாத தொருவார்த்தை
> இட்டனர் ஊரார் இடுதேளிட் டென்றன்மேல்
> கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டு"

என்று கண்ணகி காணும் கனவைக் கனாத்திறமுரைத்த காதையிலும்; கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரை வந்திருக்கையில்,

> "நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
> அறியாத் தேயத் தாரிடை யுழந்து"

என்று கோவலவன் வருந்திக் கூறுதலை ஊர்காண் காதையிலும்; கண்ணகியோடு புறஞ்சேரிக்கண் தங்கியிருக்கையில்.

> "கோவலன் கூறுமோர் குறுமகன் தன்னால்
> காவல் வேந்தன் கடிநகர் தன்னில்
> நாறைங் கூந்தல் நடுங்குதுயர் எய்தக்
> கூறைகோட் பட்டுக் கோட்டுமா ஊரவும்"

என்று கோவலவன் காணும் கனவை அடைக்கலக் காதையிலும்; கண்ணகி படைத்த அமுதுண்ணவிருக்கையில், கண்ணகியை விட்டு வாராமலே பிரிந்து செல்லப் போகின்றான் கோவலன் என்னும் பொருளில்

"வைகல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசில் செல்வன் இருந்தபின்"

என்றும், அமுது படைக்க வாழையிலையை விரிப்பதற்குமுன், தரையைத் தண்ணீர் தெளித்துத் தூய்மை செய்யும் கண்ணகி,

"மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்"தாள்

என்றும் கொலைக்களக்காதையிலும் இறுதி முடிவான துன்பத்தைக் குறிப்பாகவே கூறிக்கொண்டு வருகின்ற இளங்கோ, புறஞ்சேரியிறுத்த காதையில்தான் அவர்கட்கு நேரும் துன்பத்தைக் குறிப்பு மொழியால் மிகுதியாகக் கூறுகின்றார். வையையாறு வருந்துவதாகவும்-கருநெடுங்குவளை கண்ணீர் வடிப்பதாகவும்—மதில் மீது பறக்கும் கொடி மதுரைக்கு வரவேண்டாம் என மறிப்பதாகவும் மிகுதியாகக் குறிப்பு மொழி கூறி நம் நெஞ்சைப் பிணிக்கும் இடமாகப் புறஞ்சேரியிறுத்த காதையை அமைத்திருக்கின்றார் எனலாம்.

சிலம்பிற்கு உரைகண்ட பெருமக்களான அரும்பதவுரையாசிரியர், அடியார்க்குநல்லார், ந. மு. வே, அவர்கள் முதலியோர் வாயிலாகவும் புறஞ்சேரியிறுத்த காதையின் சிறந்தோங்கு நிலையை அறிந்து மகிழலாம்.

"......... .... பரல்வெங் கானத்துக்
கோள்வல் உளியமும் கொடும்புற் றகழா
அரவும் சூரும் இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க் குறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடென
எங்கணும் போகிய இசையோ பெரிதே"

எனும் அடிகட்கு அடியார்க்கு நல்லார், "நேரிட்டாரைக் கைக்கொள்ளுதற்கு வலிய கரடியும் தாம் அகழக்கடவ மானினத்தோடு மாறுபடா, இரைதேர் முதலையும் பாம்பும் சூரும் ஆகிய இவை தம்மை நலிந்தவர்க்கு வருத்தஞ் செய்யத் தகுவனவாயினும் செய்யா; செங்கோன்மையுடைய தென்னர் ஆணையால் காக்கும் நாடென்று திசையெங்கும்

பரந்த இசைமிகப்பெரிது ஆகலின்'' என்று உரைத்தலோடு, ''இவற்ருன் இவன் ஆணையும் ஐவகை நிலத்திற்கு உரிமையுங் கூறினர். ஐவகை நிலன் என்பது எவற்ருல் பெறுதும் எனின் — கானம் என்பதனுல் முல்லையும், சூர் கரடி என்பவற்ருல் குறிஞ்சியும், வேங்கை என்பதனுல் பாலையும், உருமு என்பதனுல் மருதமும், முதலை என்பதனுல் நெய்தலும் பெறுதும். இவ்வகையான் இவனுட்டு இக்காலத்து வருத்துவது இவ்வெயில் ஒன்றுமே என்பதாயிற்று'' என்றும் உரைத்தல் சிறப்பாக உள்ளது. ந. மு. வே. அவர்கள், இவற்ருேடு, ''கரடி தாம் அகழ்தற்குரிய புற்றினையும் அகழா எனவும், புலி தாம் மாறுபடுதற்குரிய மானினத்தோடும் மாறுபடா எனவும் கூறினமையின் அவை மக்கட்கு ஊறு செய்யா என்பது தானே போதரும்'' என்று உரை காண்டல் அழகுக்கு அழகாக இருக்கின்றது.

> ''பகலொளி நன்னினும் பல்லுயிர் ஓம்பும்
> நிலவொளி விளக்கினும் நீளிடை மருங்கின்
> இரவிடைக் கழிதற் கேதம் இல்லென''

என்னும் அடிகட்கு ''ஞாயிற்றின் விளக்கத்தினும் பல உயிர்களையும் காக்கின்ற திங்களின் ஒளியாகிய விளக்கோடு, இரவின்கண் நீண்ட நெறிக்கண்ணே செல்வதற்கு உண்டாம் குற்றம் ஒன்றுமில்லை'' எனும் இயல்பான உரையோடு, ''வழிச்சேறற்கு ஒளி வேண்டுதலானும். பகலொளி வருத்துதலானும் அதனிற் செல்லாது நிலவொளியிற் செல்கை நன்றென்ருன்'' என்று நயவுரை காண்கின்ருர் ந. மு. வே.

> ''கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
> படுங்கதிர் அமையப் பார்த்திருந் தோர்க்கு''

என்பதற்கு, கொடுங்கோன்மையையுடைய வேந்தன் குடிகள் அவன் போம் காலத்தையும், தண்ணளி வேந்தன் வருங்காலத்தையும் நோக்கியிருக்குமாறு போல வெங்கதிர் படும் அமயத்தையும் தண்கதிர் எழும் அமயத்தையும் பார்த்திருந்த இவர்கட்கு'' என்று அடியார்க்கு நல்லார் வருவித்தெழுதுதல் சிறப்பளிக்கின்றது,

"தாரகைக் கோவையும் சந்திரன் குழம்பும்
சீரிள வனமுலை சேரா தொழியவும்
தாதுசேர் கழுநீர்த் தண்பூம் பிணையல்
போதுசேர் பூங்குழல் பொருந்தா தொழியவும்
பைந்தளிர் ஆரமொடு பல்பூங் குறுமுறி
செந்தளிர் மேனி சேரா தொழியவும்
மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு
பானிலா வெண்கதிர் பாவைமேற் சொரிய
வேனில் திங்களும் வேண்டுதி யென்றே
பார்மகள் அயாவுயிர்த் தடங்கிய பின்னர்"

எனும் அடிகட்கு, "பார்மகள், பாவாய்! முன்னுள் நின் கொழுநன் நின்னைப் பிரிந்த இளவேனிற் காலத்தில், வான்மீன் ஒழுங்கு போன்ற முத்து வடமும் சந்தனக் குழம்பும் சீர்மை அழகிய இளைய முலைகளைச் சேரப்பெருவாய் ஒழியவும்; பலவகைப் பூந்தாதும் கழுநீர்ப் பிணையலும் முல்லை மலர் பற்றறுத பூங்குழலில் பொருந்தாவாய் ஒழியவும், அழகிய சந்தனத் தளிரோடே பல பூக்களின் இகழும் சிவந்த தளிர்போலும் மேனியைச் சேரப்பெருவாய் ஒழியவும். மலயத்தே முளைத்த மதுரை யிலே வளர்ந்து புலவர் நாவிலே பூத்து நிலைபெற்ற தென்றலோடே வெள்ளிய ஒளியையுடைய திங்களின் கதிர் நின் மெய்யிற் சொரிதல் ஒழியவும் வேண்டி இப்பொழுது வேனில் திங்கள் இவ்வெண்கதிரை நின் மெய்யிற் சொரியவும் விரும்பியிருப்பையே; இராய் எனச் சொல்லி வருந்தி நெட்டுயிர்ப்புக்கொண்டு அவன் துயின்ற பின்" என்றெழுதும் அடியார்க்கு நல்லார், "இத்துணையும் இவள் புணர்ச்சியின்பம் பெருமை நோக்கிப் பார்மகள் கூறனுள். என்னை புணர்ச்சியில்லா தவாறெனின்,—மாதவியோடு புலந்து போதுதலானும், மதுரைக்குச் சேறற்கு ஒருப்பட்ட நெஞ்சினனுதலானும், மேற் கவுந்தியடிகளுடன் வழிச்சேறலானும் யாண்டும் மெய்யுறல் மாத்திரமல்லது புணர்ச்சி யிலலென உணர்க" என்று உளவியலோடு ஒட்டிய சிறப்புரை எழுது மின்றமை சிறப்பாகவுள்ளது. அரும்பதவுரை ஆசிரியர், பால் நிலா வெண்கதிரைச் சொரிதற்கு வேனில் திங்களும் விரும்புவதாயிற்றன்றோ வென்று அடங்கினுள் என்பதுங் கொள்க" என்று எழுதுகின்றார்.

"வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூல் மார்பர் உறைபதிச் சேர்ந்து"

என்பதற்கு அடியார்க்கு நல்லார், நாவால் மறைநூல் நவிலாது வரிப் பாட்டை நவிலும் கோட்பாட்டையுடைய நூலணி மார்பர் உறைவ தோர் பதியைச் சேர்ந்து" என்னும் உரையோடு, "புக்கென்னாது சேர்ந்து என்றதனால், அந்தப் பார்ப்பார் இழுக்கிய ஒழுக்கமுடைமை தமது சாவக நோன்புக்கு ஏலாமையின், ஊர்க்கு அயலதோர் நகரில் கோயில் பக்கத்தில் சேர்ந்தார் என்க" என்றும் மக்களியல்பறிந்து உரைக்கின்றார்.

"கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
அருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே
வருந்தினை போலும்நீ மாதவி"

என்பதற்கு, "அங்ஙனம் அவன் நிறம் வேறுபாடுதலானும் தான் செய்மைக்கண் நிற்மலானும் ஐயுற்று அவ்வையந் தீர்வான் கோவலன் பிரிவிற்கு ஆற்றாது காமத்தியால் துயரமுற்று அலரைப் பொருது அப் பொழுது வருந்தி நின்ற மாதவியைப் போன்று நீயும் இளவேனில் நீங்க அப்பொழுதே அதற்காற்றாது பொறுத்தற்கரிய வெம்மையயுடைய முதுவேனிற் காலத்து வெயிலால் துயரமுற்று அலரைப் பொருது களைந்து அக்கால அணிமையோடே வருந்தினாய் மாதவி!' என்று அருந்திறல் வேனிற்கு அலர்களைந்து உடனே வருந்தும் மாதவிச் செடியை, கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்தும் மாதவியோடு ஒப் பிட்டு விரித்தெழுதிச் சிறப்புறுகின்றார் அடியார்க்கு நல்லார்.

"வசந்த மாலைவாய் மாதவி கேட்டுப்
பசந்த மேனியள் படர்நோ யுற்று"

என்பதற்கு, "தன் திருமுகத்தை மறுத்துக்கூறியதனை மாதவி, வசந்த மாலையினிடத்துக் கேள்வியுற்றுப் பசந்த மேனியளாய் நினைவாகிய வருத்தமுற்று" என்று அடியார்க்கு நல்லாரும், ந. மு. வே. அவர்க ளும் உரைகாண்கின்றனர். ஆனால் அரும்பதவுரையாசிரியர், "இவர் கள் (கோவலனும் கண்ணகியும்) பெயர்ந்த படியை வசந்தமாலை

சொல்லக் கேட்டு'' என்று உரை காண்டல் மாதவியின் பெருந்தன்மையை வலியுறுத்துவதாக உள்ளது.

''வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி''

எனும் அடிகட்கு, ''வடிமொழி உணர்ந்து குற்றம் தீர்ந்த நற்காட்சியை உடைய உயர்ந்தோனே! இருமுதுகுரவர் பணிவிடை ஒழித்த தன் மேலும் குலத்திற் பிறந்து கற்பை ஆளுதல் உடையவளுடனே இரவின்கண் நகரிடையைக் கழிந்து போதற்கு வந்த பிழைப்பென்னை? அஃது அறியாது என்பிழைப்போ என்று அவலித்து அரற்றிக் கவலித்துக் கையாற்றின்கண் நெஞ்சு அழுங்கா நின்றது; என் பிழைப்பு எனினும் மகளிர் சொல் குற்றம் அருத சொல்லென்று திருவுளம் பற்றல் வேண்டும்; இதுவேயுமன்றி எனக்கு இப்பொழுது நடக்கின்ற இச் செயலறவு நன்றன்று; அதனைக் கடியல் வேண்டும்; ஆதலால் இவ்வாற்றான் நினக்கு ஒரு புகழ்க்குறைபாடின்றாகப் போற்றுவாயாக'' எனும் உரையோடு, ''முன்னர், கங்கை தன்னைப் புணர்ந்தாலும்' எனவும், 'மங்கை மாதர் பெருங்கற்பு' எனவும் ஆண்டுக் கூறினமையின், ஈண்டுக் குலப்பிறப்பாட்டியெனத் தோற்றுவாய் செய்து தன் பிழைப்பின்மை கூறினாள். இதுவன்றியும், இருவர் இருமுதுகுரவரும் ஏவலாளர் மேவல கூறின் இறந்துபடுவர் என்பதூஉம், தேசுடைக் குலத்திற்கு மாசு வரும் என்பதூஉம், தான் இறந்துபடிற் சிறிது புகழே குறைபடும் என்பதூஉம் உணர்த்தியவாறாயிற்று'' என்றும் அடியார்க்கு நல்லார் எழுதும் உரை மாதவியைப்பற்றிய நல்லெண்ணத்தை வளர்க்கத் துணை செய்கின்றது. ''கங்கை தன்னைப் புணர்ந்தாலும்'' எனவும், ''மங்கை மாதர் பெருங்கற்பு'' எனவும் ஆண்டுக் கூறினமையின்'' என்று அடியார்க்கு நல்லார் எழுதுதலை நோக்கின், கானல்வரிக்கும் இவர் உரை எழுதியிருப்பர் என்றே தோன்

றுகின்றது. கானல்வரி, வழக்குரை காதை, வஞ்சினமாலை, அழற்படு காதை, கட்டுரை காதை, வஞ்சிக்காண்டம் முதலியவற்றிற்கு இவர் உரை இல்லை, எல்லாவற்றுக்குமே இவர் உரை எழுதினார். ஆனால் மேற்கூறப்பெற்றவற்றுக்கு இவர் உரை இழக்கப்பட்டது என்பதை "But it is unfortunate that the whole of the commentary is not available. It is not available in respect of the cantos entitled Kanalvari, Valakkuraikadai, Vanjinamalai, Alarpatukadai, and Katturaikadai, and the whole of Vanjikkandam. Two explanations can be offered. One is that he did not write a commentary on these cantos and other is that these portions have been lost. The latter theory seems more plausible in view of internal evidence which can be gathered from the commentary The following may be adduced.

(1) In his glass on the term 'Vari' in Arangerrukadai', he says more details are furnished in 'Kanalvari'.

(2) Again, in the same Kadai, in his glass on the yal (1. 26) he says that an elaborate examination of it is made in Kanalvari'.

(3) In commenting on lines 27-8 of Venirkadai he remarks that he has spoken of it before under ani etc. This ani is in the original text of 'Kanalvari' 1. 3.

(4) Again, in commenting on lines 106 - 7 of Arangerru-kadai, the remark is made that it would be examined in extenso in 'Alarpatukadai'.

(5) Further, in his comment on lines 45-71 of 'Venir-kadai he refers to the fact that additional details are given in 'Katturaikadai', and a reference may be made to it.

Ii is thus established that Adiyarkkunallar certainly wrote his commentary on all the kadais, and that work as complete one is now lost to us." என்று வி. ஆர். இராமச்சந்திர தீட்சதர் நன்கு தெளிவுபடுத்துகின்றார்.

> ''தன்தீ திலளெனத் தளர்ச்சி நீங்கி
> என்தீ தென்றே எய்திய துணர்ந்தாங்கு''

என்பதற்கு அடியார்க்கு நல்லாரும், ந. மு. வே. அவர்களும் ''அவள் தன்னால் செய்யப்பட்ட தீதிலள்; இஃது என்னால் செய்யப்பட்ட தீதே எனத் தெளிந்து தளர்ச்சி நீங்கி, அவ்வோலையில் பொருந்திய வாசகத்தை உணர்ந்து'' என்று பொருத்தமான உரை காண்கின்றனர். ஆனால் அரும்பதவுரையாசிரியர் 'எய்தியது உரைத்து' என்று பாடங் கொண்டு, ''தான்போந்த காரணம் சொல்லி'' என்று பொருள் எழுதுகின்றார். கோவலன் நன்கு உணர்கின்றமையால்தான் மாதவி குற்றமற்றவள், தானே குற்றம் உடையவன் எனும் கருத்து அவனுக்கு ஏற்படுகின்றது. இத்தகைய கருத்து அவனுக்கு ஏற்படுகையில், 'தான் அவளை விட்டு வந்தமைக்குக் காரணம் சொல்லமாட்டான். விட்டுவந்தமைக்குக் காரணம் சொல்கின்றான் என்றால், அவள்மீது கொண்ட ஐயம் இன்னும் தெளியவில்லை என்று பொருளாகுமேயொழிய, ''தன் தீதிலள் எனத் தளர்ச்சி நீங்கி என் தீதென்''றே உணர்தற்கு இடமில்லை. எனவே 'எய்தியது உரைத்து' எனப் பாடங்கொண்டு 'தான் போந்த காரணம் சொல்லி' என்று அரும்பதவுரையாசிரியர் பொருள் செய்தல் எவ்வளவிற்குப் பொருத்தமுடையது என்பது சிந்தனைக்குரியது.

> ''மாசில் குரவர் மலரடி தொழுதேன்
> கோசிக மாணி காட்டெனக் கொடுத்து
> நடுக்கங் களைந்தவர் நல்லகம் பொருந்திய
> இடுக்கண் களைதற் கீண்டெனப் போக்கி''

என்பதற்கு அடியார்க்கு நல்லாரும், ந. மு. வே. அவர்களும், ''கோசிக மாணி! எங்குரவர் மாசில் மலரடியைத் திசைநோக்கித் தொழுதேன் எனச் சொல்லி இவ்வோலையைக் காட்டெனக் கொடுத்து, என் பொருட்டாக அவர் நடுங்கும் நடுக்கத்தைக் களைந்து அகத்தில் நிகழ்கின்ற இடுக்கணும் நீக்குதற்கு விரைந்து செல்வாயாகவெனப் போக விட்டு'' என்று உரையெழுதுகின்றனர். அரும்பதவுரை யாசிரியர், 'நடுக்கங் களைந்து' என்பதற்கு (கோசிகமாணி!) 'நீ நடுங்குகின்ற நடுக்கத்தை விட்டு' என்று எழுதும் உரை பொருந்துமா என்பதும் ஆய்விற்

குரியது. இருநிதிக்கிழவனும் பெருமனைக் கிழத்தியும் அருமணி இழந்த நாகம் போன்றும், இன்னுயிர் இழந்த யாக்கைபோன்றும் கோவலன் பிரிவால் உள்ளனர் என்று தன் பெற்றோர் உற்ற நிலையைக் கோசிகன் வாயிலாக அறியும் கோவலன், அவர் தம் நடுக்கத்தையே களைய வேண்டும் என்று சொல்வானே அன்றிக் கோசிகனின் நடுக்கத்தைக் களையுமாறு சொல்லல் இயலாது. மேலும் கோசிகன் கோவலன் நிலைக்காக நடுக்கமுற்றிருக்கின்றான் என்றும் இக்காதையால் தெரியவில்லை.

''பரிமுக அம்பியும் கரிமுக அம்பியும்
அரிமுக அம்பியும் அருந்துறை இயக்கும்
பெருந்துறை மருங்கிற் பெயரா தாங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகி''

என்பதற்கு அரும்பதவுரையாசிரியர், ''ஓடத்தில் பலரும் ஏறுவார் ஆதலால் தாங்கள் மூவரும் தனியே மரப்புணையிலே போனார்கள்'' என்று எழுதுகின்றார். அடியார்க்கு நல்லாரும், ந. மு. வே. அவர்களும், ''முன்னர், வம்பப் பரத்தை வறுமொழியாளனொடு சாபமுறுதலின், ஈண்டு மருங்கிற் பெயராதென்றார்.'' என்றெழுதும் உரை உளவியலை ஒட்டித் திகழ்கின்றது. செல்வக் குடியைச் சேர்ந்த கோவலனும் கண்ணகியும் தம் நிலையில் திரிந்து வேற்று நாடு வந்து வருந்துகின்றனர், உயர் குடியிற் பிறந்த அவ்வுள்ளங்கள், தம்மைப் பிறர் பலவாறாகப் பேசிக்கொள்ளப் பொறுக்கமாட்டா. முன்னரே ஒருமுறை கவுந்தியடிகளுடன் வருகையில், வழியில் செல்லும் வம்பப் பரத்தையர் அவர்களைப் பேச்சால் புண்படுத்திய நினைவால், மீண்டும் அத்தகைய புன்மையாளரால் மனம் புண்படக் கூடாது என்று எண்ணுகின்றனர். அவ்வாறு எழும் எண்ணமே, பலரும் செல்லும் பெருந்துறை மருங்கில் அவர்கள் பெயராமல் தனியே மரப்புணையில் செல்லுமாறு செய்கின்றது என்னும் கருத்தில் உரையாசிரியர் மூவரும் எழுதும் உரை சுவையாகவுள்ளது.

''கருநெடுங் குவளையும் ஆம்பலும் கமலமும்
தையலும் கணவனும் தனித்துறு துயரம்
ஐயமின்றி அறிந்தன போலப்
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்க''

என்பதற்கு, ''குவளையும், ஆம்பலும், கமலமும்; தையலும் கணவனும் மேல் தனித்துறுந்துயரத்தைத் தாம் தெளிய அறிந்தன போல வண்டுகள் இரங்கும் பண்ணீர்மையைக் கொண்டு பரிந்தேங்கியழுது கண்ணீரைக் கொண்டு காலுற நடுங்கா நிற்க'' என்று அடியார்க்கு நல்லார் உரை எழுதுகின்றார். குவளையும் ஆம்பலும் கமலமும், அவற்றின் மேல் ஒலிக்கும் வண்டுகளின் பண்ணீர்மையால் அழுதல் போன்றிருந்தன என்று கூறும் போது, அம்மலர்களிடத்துள்ள கள் (தேன்) சொரிதலால் கண்ணீர் சொரிதல் போன்றிருந்தன என்றும் பொருத்தமாகச் சொல்ல வேண்டும் என்னும் பொருளில் 'கண்ணீர் கொண்டு' என்பதற்குக் 'கள்ளாகிய நீரைக் கொண்டு' என்று அரும்பதவுரையாசிரியர் எழுதும் உரையில் எழில் திகழ்கின்றது.

மணமுள்ள மல்லிகை செடியிலிருந்தாலே சிறப்புறுகின்றது. தாம் அழகாகத் திகழ மங்கை நல்லாள் குழலிலே சூடிக் கொள்கின்றாளே தவிர, மல்லிகை அழகாகத் திகழச் சூடுதலில்லை. சிலம்பு, தானே அணைவர் உள்ளங்களையும் பிணிக்கின்றது; என்றாலும் உரையாசிரியர் மூவரும் சிறப்புறுதற்காகச் சிலம்பைத் தொட்டனர், சிறப்படைந்தனர், கண்டோம்.

பல்லொக்கும் முத்தென்றும்—பவளமொக்கும் இதழ் என்றும்—வில்லொக்கும் நுதல் என்றும்—வேல் ஒக்கும் விழி என்றும்—சொல்லொக்கும் தேன் என்றும்—சுவையொக்கும் கரும்பென்னும் புறத்தோற்றத்தால் பொலிவு பெறும் காதலியாகவிருந்தாலும் நெஞ்சொத்த அன்பு இருந்தால் தான் வாழ்வு வளமாகும். நெஞ்சின் நேர்மையைப் பொறுத்தே உலகமும் வாழ்கின்றது. இதனையறிந்தே நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்தளித்தார் இளங்கோ. ஒருகாதையே நெஞ்சையள்ளும்போது, சிலம்பு முழுமையும் நம் நெஞ்சை அள்ளத்தானே செய்யும்.

இளம்பூரணர் எழுத்துரை

5. சிலதிருத்தங்கள்

(ஆ. சிவலிங்கனார், மயிலம்.)

(1) அவைதாம்

குற்றிய லிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன (தொ. எழு. 2.)

இந்நூற்பாவுக்கு உரையாசிரியர்,

"மேற்சார்ந்துவரும் எனப்பட்டவைதாம் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் என்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளியும் என இவை; மேற் சொல்லப்பட்ட முப்பது எழுத்தோடு ஒரு தன்மைய"

என உரை யெழுதினர். இவ்வுரையில், குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்பனவற்றின் இறுதிகளில் எண்ணும்மைகள் தொக்கனபோலவும் இம்மூன்றற்கும் புள்ளி என்று பெயர்போலவும் எழுதப்பட்டுள்ளது. குற்றியலிகர குற்றியலுகரங்களையும் புள்ளியெழுத்துக்கள் என ஒரு சாராரும், இல்லை; அவை உயிராகற்பாலன என ஒரு சாராரும் வாதிப்பர். இவ்விரண்டனுள் இளம்பூரணர் இரண்டாம் கொள்கையுடையவரேயாவர். அதை, "இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற்பாலன" என இவர் இந்நூற்பாவின் உரைக்கீழ் எழுதியதால் அறியலாம். அதனால் இந்நூற்பாவில் உள்ள "ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்" என்பதை ஒரே தொடராகக் கொண்டார் உரையாசிரியர். அதாவது ஆய்தம் என்ற புள்ளி முப்பாற் புள்ளி என்பது ஆய்தம் என்ற ஓர் எழுத்தையே குறிக்கவந்தது என்பது அவர் கொள்கை. புள்ளியும் என்பதிலுள்ள உம்மை ஏனைக் குற்றியலிகர குற்றியலுகரங்களில் தொக்கிவந்தது. அதனால்தான் இவர் உரை விசேடத்தில் "குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்னும் எண்ணும்மை விகாரத்தால்

தொக்கன" என எழுதினர். மூன்றுமே புள்ளியெனப் பெயர் பெறும் எனக்கொண்டிருப்பாராயின் "குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தமும் என்ற எண்ணும்மை விகாரத்தால் தொக்கன" என்று எழுதியிருப்பார். இதை நோக்க உரையில் 'ஆய்தமும்' என்பதில் உள்ள உம்மை தேவையற்றது என்பது போதரும். இத்தவறு ஏடெழுதியோரால் நேர்ந்திருக்கலாம்.

(2) புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே. (எழு, 1)

இந்நூற்பா உயிரும் மெய்யும் கூடுமாறு உணர்த்துவது. இதன் உரை,

"எல்லா மெய்களும் புள்ளியில்லையாம் படியாக;
தத்தம் முன்னை வடிவே பின்னும் வடிவமாக
அகரத்தோடு ஒலித்தலும் ஒழிந்த உயிர்களோடு
வடிவு வேறுபட்டு ஒலித்தலுமாகிய அவ்விரண்டு
இயல்பினையுடைய அவையொலிக்கு முறைமை"

என்பதாம் இந்நூற்பாவில் 'இல்லா' என்ற சொல்லைப் பற்றி இளம்பூரணர், 'இல்லையாம்படியாக' எனவுரையெழுதியவர், பின் உரை விளக்கத்தில் "இல்லாத என்பது 'இல்லா' என நின்றது" எனவும் எழுதினர். இல்லையாம்படியாக என்னுமிடத்தில் வினையெச்சமாகவும், இல்லாத என்னுமிடத்தில் பெயரெச்சமாகவும் இருத்தலின் இவ்வாறு மாறுபட எழுதமாட்டார் உரையாசிரியர். ஆதலின் "இல்லாத என்பது இல்லா என நின்றது" என்ற பாடம் தவறுடையதாகும். இப்பாடம் திரு. கன்னியப்பமுதலியார் பதிப்பில் உள்ளது. அதை அப்படியே சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரும் பதிப்பித்தனர். ஆனால் திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்கள் பதிப்பில் "இல்லாக என்பது இல்லா என நின்றது" என்று காணப்படுகின்றது. இப்

பாடமே சிறக்கும். ககர தகர எழுத்துக்களின் வேறுபாடு அறியாத நிலையில் ஏடெழுதினோரால் நேர்ந்த தவறாகலாம். அதனால் இல்லாத என்பதை இல்லாக எனத் திருத்திக் கொள்ளலாம்.

(3) அவற்றுள்,

ரகார ழகாரங் குற்றொற் றாகா (எழு. 49.)
"மேற் கூறப்பட்ட யரழ என்னும் மூன்றனுள்ளும் ரகாரமும் ழகாரமும் குறிற்கீழ் ஒற்றாகா"

என்பது இதன்பொருள். இதில் குற்றொற்று என்பதற்குக் 'குறிற்கீழ் ஒற்று' என்ற உரையாசிரியர் "குற்றொற்று என்பது குறிதாகிய ஒற்று எனப் பண்புத்தொகை; குறிற்கீழ் நிற்றலான் குறியது எனப்பட்டது" எனவும் எழுதினர். குற்றொற்று என்பது குறிற்கீழ் ஒற்று என்னும்போது ஏழாம் வேற்றுமைத் தொகையாம். குறிதாகிய ஒற்று என்னும்போது பண்புத் தொகையாம். உரையில் வேற்றுமைத் தொடராகக் கொண்டு விளக்கத்தில் அல்வழித் தொடராகக் காட்டுவது பொருந்தாது. குறிதாகிய ஒற்று என இரு பெயரொட்டுப் பண்புத்தொகையாகக் கூறுமிடத்துக் குறிது என்னும் முதற் சொல்லும் (சிறப்புப்பெயர்) ஒற்று என்னும் இரண்டாம் சொல்லும் (பொதுப்பெயர்) ஒரே பொருளை நோக்குதல் வேண்டும். குறிது என்பது ஒற்றுக்குப் பெயராக வருதல் இல்லை. எனவே உரை விளக்கத்தில் எழுதிய தொடர் பொருந்தாது; மாறுபட்டதாகும்.

(4) அவற்றுள்

இகர வீற்றுப்பெயர் திரிபிடனுடைத்தே (எழு. 155)
"மேல் (154) சொல்லப்பட்ட உயர்திணைப்பெயருள் இகரமாகிய இறுதியையுடைய பெயர் திரிந்து முடியும் இடமும் உடைத்து"

என்பது இதன்பொருள்.

உயிரீ றாகிய வுயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி யுயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப (154)

என்று முதலிற் கூறி அடுத்து, "இகரவீற்றுப்பெயர் திரிபிடனுடைத்து" என்றமையின் திரிபாவது மிகுதி எனக் கொள்ள வேண்டும். எட்டி என்பது வணிகருட் சிறந்தோர்க்கு அரசராற் கொடுக்கப்படும் பட்டப் பெயர். காவிதி என்பது உழுவித்துண்ணும் வேளாளருள் சிறந்தோர்க்கு அரசராற் கொடுக்கப்படும் பட்டப்பெயர். எட்டி காவிதி என்ற இகரவீற்றுப் பட்டப்பெயர்கள் உயர்திணைப் பெயர்களாம். இவைகள் எட்டிப்பூ, காவிதிப்பூ என வருமொழி வல்லெழுத்தோடு மிக்குப்புணரும். இந்நூற்பாவின் உரையின்கீழ் இளம்பூரணர்,

> "இடனுடைத்து என்றதனால் இகரவீறன்றிப்
> பிறவீறும் ஈறு திரியாது வல்லெழுத்து
> மிக்கு வருவன ஈண்டுக் கொள்க. திணைப்பூ, திணைப்
> புரவு எனவரும்"

எனவும் எழுதினர். திணையென்பது ஐகார வீறுதலின் இவ்வாறு எழுதினர். இதனால் திணை என்பது எட்டி காவிதி போன்றதோர் அரசரால் தரப்படும் சிறப்புப் பெயராதல் வேண்டும் என்பது பெறப்படும். இன்றேல் இவர் எழுதியது பொருந்தாது.

(5) ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா வெண்ணும் சொல்லுங் காலை
ஆனிடை வரினும் மானம் இல்லை
அஃதேன் கிளவி ஆவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே (200)

இந்நூற்பா ஒருபஃது என்பது ஐ முதலிய உருபுகளுடன் வரும்போது ஆன் சாரியை பெற்று ஒருபானையெனவரும் என்று கூறுவதாம். இந்நூற்பாவுக்கு முன் "எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்" என்னும் நூற்பா கூறப்பட்டது. ஒன்று முதல் எண்கள், ஐ முதலியவற்றுடன் வரும்போது அன்சாரியை பெற்று 'ஒன்றனை' என்பது முதலியவாக வரும் என்பது அதன் பொருள், அவ்வாறே ஒருபஃது

முதலிய எண்களும் 'அன்'னே யன்றி ஆன்சாரியையும் பெற்றுவரும், 'ஆனிடைவரினும் மானமில்லை' என்றது காண்க. எனவே உதாரணம் ஒருபானை, ஒருபஃதனை எனக் காணலாம். இளம்பூரணர்,

"ஒருபானை ஒருபானேடு; ஒருபஃதினை, ஒருபஃதினேடு;
இருபஃதினை, இருபஃதினேடு என ஒட்டுக"

என உதாரணம் காட்டினர். ஒருபஃதினை முதலியவற்றில் இன்சாரியை இருக்கிறதேயன்றி அன்சாரியை யில்லை, அன் சாரியை பெற்ற உதாரணம் காட்டவேண்டும். அதனல் ஒரு பஃதனை, ஒரு பஃதனெடு முதலியவாகக் காட்டவேண்டும். அவ்வாறே திருத்திக்கொள்ளலாம். [தொடரும்]

இருவேறு உலகத்தியற்கை

புலவர் வெ. சி. சீனிவாசன்

(81-ஆவது பக்கத் தொடர்ச்சி)

கல்லாடர் நெடுஞ்செழியனைக் 'காலன்' என்றே குறித்திட்டார். காலனது பாசக்கயிற்றுக்குக் காவலனாயினும் நாவலனாயினும் தப்ப இயலாது; அதுபோலவே செழியனது சீற்றத்துக்கும் இக்காவலன் தீவிலே தப்புவோர் இல்லை. எத்துணை அழகான அற்புதமான உவமை! போர்வெறி கொண்ட அவன் உள்ளத்திற்கு அவ்வுவமை ஒரு போதையை ஊட்டியிருக்கலாம். அடுத்துக் கூறப்பட்ட கருத்து அவலம் நிறைந்ததாயிற்றே! அதைக்கேட்ட அவன் உள்ளம் களித்திருக்குமா? அல்ல, அல்ல. கவன்றிருக்கும், அவன் கவியுணர்ந்தவனன்றோ? கவிஞன் வைத்த குறிப்பைக் கருத்தில் நிறுத்தாமலா இருப்பான்?

பெண்மானின் இன்னல் நிறைந்த வாழ்வு பெருமன்னன் முன்னிலையில் விளக்கவேண்டிய அவசியம் என்ன? தன்னைக் காண, கண்டு செய்தியொன்று சொல்ல விழைவதாகவும் புலவர் புகன்றுள்ளனரே? ஆம், கவிஞன் கண்டு வந்த காட்சி மங்கையரின் நெஞ்சங் குலைந்த வாழ்வே; காதலுக்குரியவரையும், கட்டியணைத்தவரையும் விட்டுப்பிரிந்த அவர்கள் அவலநிலை; தங்கள் அன்பு மதலையருக்கும் இன்னல் நேருமோ என்ற அவர்கள் மன நடுக்கம்.

நெடுஞ்செழியன் நினைத்துப் பார்த்தான், நீண்ட காலமாகத் தான் செய்த போர்களைத் தன் காட்சிக்குக் கொண்டு வந்தான். தன் நாட்டிலும், பகைவர் நாட்டிலும் அங்கங் குலைந்த ஆடவரும், ஆருயிர் துறந்த வீரரும் அவன் காட்சியில் தோன்றினர், அவர்கள் இல்லற வாழ்வு இடிந்து வீழ்ந்திட்டது; மனைவி மக்கள் மாறாத துயரில் மூழ்கிவிட்ட

னர். பொதுமக்களோ தேடிய பொருளையெல்லாம் போருக்கிறைத்து வாடிவிட்டனர். அவர்கள் வேர்வையில் விளைந்த நெல்லும் புல்லும் போர் வெள்ளத்திலே கரைந்து இரத்தக் கறையாக நிலமகள்மீது படியலாயின. செழியனது காட்சிக்கு எங்கும் பாலைவனமே தென்பட்டது. போரின் முடிவு என்ன? எல்லைக்கோடு மாறுகிறது, அவ்வளவுதான். ஆனால் போர் செய்ய மக்கள் படவேண்டிய அவதி. கொடுமை கொஞ்சமல்ல, கோடிக்கணக்காம். அவன் உள்ளம் போர்வெறியை மாற்றிக் கலையுணர்வைக்கொண்டது.

ஆயின், அக்காலம் போர்க்கோலம் பூண்டொழுகியது. உலகை வெல்வதிலே அக்காலம் நாட்டம் செலுத்தியது, வாழ்வின் துயரை வெல்ல எவரும் துணிந்திலர். வென்றவர் வெற்றியுலாவந்தனர். தோற்றவர் காலம்பார்த்து நின்றனர். ஆற்றல் பெற்றவுடன் மங்காச் சினம் பொங்கியெழப் போர்ப்பறை கொட்டி எழுந்தனர். பழிவாங்கப் போர், பார் கொள்ளப் போர், பாரோர் பரிதவிக்கப்போர். வரலாறு சுற்றிச்சுற்றித் தொடங்கியஇடத்திலேயே முடிகிறது.

அழிவுதரும் போரை அணைக்க இயலுமா? போர் செய்வதில்லை என்ற சூளுரை உரைத்தாலென்ன? செழியன் சிந்தித்தான். போர்வெறி கொண்ட அரசர்க்கு அவன் பதிலுரை என்ன? சமாதானமா? அவர் ஒப்பவேண்டுமே, ஒப்பாவிடின் செழியன் தான் கொண்ட மண்ணைக் கொடுத்திடுவானே? ஆண்மை மிக்க அவன் மனம் அம்முடிவிற்கு அடிபணியவில்லை. அவனுள்ளம் களம் கண்டே பழகி வந்தது. களம் கண்டவுடன் மனம் வெற்றியை விரும்பும், வெற்றி போதை ஏறியவுடன் உள்ளம் வெறிகொள்ளும். அதிலிருந்தும் அவன் இனி மாற இயலாது.

அன்றொருநாள், மாங்குடி மருதனார் செழியனின் அருகமர்ந்திருந்தார். அவன் உள்ளத்தில் போர்வெறியை மாற்றி

அறநெறியை அமைக்க விரும்பினர். அவன் வீரத்தையும் வெற்றியையும் விளங்கப் பாடினர். அவன் கண்ட களங்களையும் கொண்ட நாடுகளையும் விரிவாக விண்டுரைத்தார். மதுரை நகரின் மாடமாளிகைகளையும், மங்காத பொன் வண்ணங்களையும் அழகுபெற வருணித்தார்.

இத்தகைய வளமிக்க நாடும், வான்தோயும் நகரமும் அமைதிபெற வாழவேண்டும், செழியனும் அவன் சுற்றமும் பதினறுவகைச் செல்வமும் பாங்குறப்பெற்று வாழவேண்டும் என்றும் குறித்திட்டார் அவர். போர் செய்யும் எண்ணம் மாறினலொழிய அமைதி நிலவாது, அகமகிழ்வும் ஆனந்த வாழ்வும் உண்டாகா.

ஆயின், செழியனே போர் வெறியினின்றும் மீள முடியாது தவிக்கின்றான். ஆகவே, அவனுக்கு நிலையாமையை விளக்கி நிலையான செயல்களை அறிவுறுத்தினர் பாவலர்.

'செழிய! அறிவிற் சிறந்த உனக்கு அறவுரை தேவையில்லை. இருப்பினும் ஒன்று மட்டும் சொல்ல விழைகின்றேன், கேட்பாயாக. உனது உள்ளத்தில் தோன்றிய மயக்கம் கெடட்டும். செல்லவேண்டிய வழி அறநெறியா? போர் வெறியா? என்று தடுமாருதே. போரால் உலகை வென்று உன்னதமாக ஆண்ட மன்னர் திரையிடு மணலினும் பலர். அவர் பெயர் மங்கி மறைந்ததேயொழிய நின்று நிலைபெறவில்லை. ஏன்? மக்கள் வாழ்வு மலர, உள்ளங்களில் இன்பம் பெருகிட, முகங்களில் இனிமை தவழ அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. மாருக மக்கள் வாழ்வை இடுகாட்டிற்கு இட்டுச்சென்றுர்கள். சாவெனும் அரக்கனின் கோரப் பிடிகளில் சேரவைத்தார்கள். எனவே மக்கள் உள்ளங்களில் அவர்கள் பெயர் நிலவவில்லை.

கலை உணர்ந்த காவலனே! நலன் நாடின், உன் வழியைத் திருப்பு. உன் நாட்டில் வேளாண்மை செழிக்கட்டும்.

இன்பப் பொருள்கள் பெருகட்டும். இன்பக்கலைகளும், இனிமைக் கவிதைகளும் மலரட்டும். ஆக்கவேலைகள் அளவின்றிச் செய்வாயாக. நிலந்தருதிருவின் நெடியோன் என்ற உன் முன்னோனும் ஒரு பாண்டியன் இத்தகைய சீரிய பணிகள் பல செய்து சிறப்படைந்தான். அவன் ஆட்சியில் ஆக்க வேலைகள் அதிகம். அவன் வரலாறு ஓர் திருப்புமுனை. உனக்கும் அத்தகைய சிறப்புக்கள் உண்டாகுக எனப் பாடினார்.

"அன்னாய்! நின்னொடு முன்னிலை எவனோ,
கோன்னோன்று கிளக்குவல் அடுபோர் அண்ணல்!
கேட்டிசின் வாழி! கெடுக நின்னவலம்!
கெடாது நிலைஇயர்! நின் சேண் விளங்கு நல்லிசை"

206—209 மதுரைக்காஞ்சி

"பணை கெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்
கரை பொருது இரங்கும் கனையிரு முந்நீர்த்
திரையிடு மணலினும் பலரே, உரை செல
மலர்தலை யுலகம் ஆண்டு கழிந்தோரே"

234—237 மதுரைக்காஞ்சி

இவ்வாறு உலக நிலையாமையை விளக்கினார் புலவர். உலகந்தானே நிலையற்றது நமக்கென்ன என்று மன்னன் எண்ணுவானோ என அஞ்சிப் புலவர் அவன் இளமை நிலையற்றதையும், வாழ்வின்நிலையாமையையும்எடுத்தியம்பினார்.

அன்பு மன்னனே! நீ தான் எவ்வளவு நாள் வாழ இயலும். உனது இனிய இளமைப் பருவம் இனிமையற்ற போரில் கழிந்தால்பின் எப்போது இன்பம் நுகரப்போகிறாய்? இல்லாளோடு இன்பமாக வாழ்வது எப்போது? காதல் என்பது மலரினும் மெல்லிதன்றோ? அந்த மென்மை உன் உள்ளத்தில் மேவினால்தான் உன்னால் இன்பம் நுகர இயலும். பாகம் அமைந்த தேறலை உனது மகளிர் அளிக்க அகமலர்ந்து அருந்துவாயாக. வளம் அமைந்த இளமைப்

பருவத்தை நழுவவிடாது இன்பத்தில் இனிது செலவழிப் பாயாக. உனக்களிக்கப்பட்ட வாழ்நாளை அமைதியோடு கழிப்பாயாக என்று உள்ளம் கொள்ளும் பாங்கில் அவ னுக்கு அறிவுரை தந்தார்.

> "இலங்கு இழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
> மணங் கமழ் தேறல் மடுப்ப, நாளும்
> மகிழ்ந்து இனிதுறைமதி, பெரும!
> வரைந்து நீ பெற்ற நல்லூழியையே!"

மதுரைக்காஞ்சி 779-782

வள்ளல் பாரி தன் வளமெல்லாம் வாரியிறைத்து விட்டு வானுலகடைந்தான். ஆயின், அவன் மகளிர் தேனிலவின் கீழமர்ந்து தவித்தனர். குன்றின் மீதமர்ந்து குளத்தில் நீர் குடிக்கும் யானைகளை எண்ணி மகிழ வேண்டியவர் குன்றம் இழந்து குலைந்து நின்றார்கள். ஒருவள்ளல் வளமிழந்து வாடினான் என்றாலும் நாம் வருந்தாமல் இருக்கலாம்; சோற் றுக்கின்றிச் சோர்ந்து சுற்றினான் என்றறியினும் நாம் உள் ளம் உலையாமல் இருக்கலாம். ஆனால். தானஞ் செய்து வாழ்ந்ததால் ஒருவனுக்கு இவ்வுலகம் மானமற்ற வாழ்வைத் தருகிறதென்றால், நாம் மனம் இடியாது என் செய்வது?

பாரி மகளிரை ஊர் ஊராக அழைத்துச் சென்றார் கபிலர் என்று நாம் அறிகிறோம். சென்று, நீ மணந்து கொள், நீ ஏற்றுக்கொள் என்று பலமன்னரிடம் பரிந்து கேட்டாராம்; வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கி றது. பெண் கேட்கப் போவதே பண்டைத் தமிழ்நாட்டின் பண்பாடு. பெண் கொடுக்க மணமகன் வீட்டிற்கு போவ தன்று.

விச்சிக்கோவிடம் சென்ற புலவர் அவன் புகழை மெச் சிப் பாடினார். பின்,

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

"இவரே......................பாரி மகளிர்

....

நினக்குயான் கொடுக்கக் கொண்மதி"

புறம் 200

இவ்வாறு அவன் உள்ளங் கரையக் கபிலர் பாடினார். ஆயினும்என்ன? அவன் மறுத்தான், அவமதித்தான். கபிலர் சபலம் அடைந்தாரல்லர். நம்பிக்கை ஒளி அவர் உள்ளத்தில் மின்ன இருங்கோவேளிடஞ் சென்றார். நல்லார் சிலரேனும் இந்நானிலத்தில் இருப்பர் என்பது அவர் கருத்துப் போலும்! இருங்கோவேளை விரும்பிப் புகழ்ந்துரைத்தார். 'பாரியை வாழச் செய்தான்மகளிருக்கு நீ வாழ்வு தா' என வேண்டினர்.

"இவர் யார் என் குவை யாயின், இவரே
நெடுமாப் பாரி மகளிர் ....
வேளிருள் வேளே! விறற்போர் அண்ணல்
யான்தர இவரைக் கொண் மதி"

புறம் 201

விடை என்ன? அது வேதனை மட்டுமல்ல, அவர் கொள்கைக்குச் சோதனையாகவும் இருந்தது. புலவர் பின்னும் உள்ளத்தை உடைய விடவில்லை.

இலட்சிய வாழ்வு உலகில் வெல்லுமா? தோற்குமா? வள்ளிய மனங்கொண்ட தெள்ளியோர் வாழ்வாரா? அல்லது வீழ்வாரா? உலகம் நல்லறங்களை இலக்காக கொள்ளப் போகிறதா? அல்லது அலட்சியமாகத் தள்ளப்போகிறதா? கேள்வி அலைகள் உள்ளத்தில் மோதல் கொண்டன. நாடு முழுதும் சுற்றிச் சோதித்து விடைகாண விழைந்தார். கோவலூர் ஆண்ட கோமகனைச் சென்றடைந்தார். அவன் பெருவீரனும் பெயர்பெற்ற வள்ளலும் அல்லவோ? கோழைகள்தாம் அன்பு செலுத்த அச்சங் கொள்வார்கள். அந்த வீரவள்ளல் தன்னுள்ளம் அனைத்தும் திறந்து காட்டினான்.

'பாம்பின் காலைப் பாம்புதான் அறியும்' என்பது பழமொழி. அதற்கேற்ப வள்ளல் பாரியின் தெள்ளிய நெறியைத் திருமுடிக்காரி நன்கறிவான். கபிலர் வாயிலாகப் பாரியின் சோக வரலாற்றைச் செவிமடுத்துக் கேட்டதன் பின் பாரி மகளிரிடம் தனிப்பரிவு காட்டினுன் திருமுடிக்காரி. அங்கவை சங்கவையாம் அவ்விரு பெண்மான்களையும் தன் மக்களுக்கு மணமுடித்து மகிழ்ந்தான் என்று அறிகிருேம்.

தியாகம் என்பது தீதான்; அதில் குதித்தவர் வெந்து சாம்பலாவதை நாம் வாழ்வில் காண்கிருேம். கண்டும் யாரும் தியாகம் செய்ய அஞ்சுவதுமில்லை, அயர்வதுமில்லை. ஏன்? அந்தச் சாம்பலாம் உரத்தால் தான் உயிர்களாம் பயிர்கள் வளர்கின்றன; வளம் பெறுகின்றன. ஆகையால் தான் வள்ளுவரும் வறுமை வந்துற்ற போதும் தருமம் செய்வதில் தளரமாட்டார்கள் தங்கள் கடமையையறிந்த மேலோர் என்று கூறியருளினுர்.

"இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்"

குறள் 218

காட்சியவர் என்று அவர் அமைத்த சொல்லாட்சியை நாம் காணவேண்டும். அறிவுக்காட்சியை தங்கள் அகத்திலே அமைத்தோர் தாம், தெள்ளியோர் தாம் சேவை செய்வதில் (ஒப்புரவு செய்வதில்) தயங்கார். நாம் அறிவுக் காட்சியைப்பெற்ற தெள்ளியோனும் வள்ளல்பாரியைக்கண்டோம் அவன் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகத்தால் இழந்தான். பருவமங்கையைத் தெருவிலே விடுத்துச் சென்ருன்; தந்தையின் கடமையாகிய திருமணத்தைக் கூட அவர்கட்கு அவன் முடித்து வைக்கவில்லை.

இத்தகைய இல்லாத நேரத்தில் அப்பெண்டிரின் இல்லத்திற்கு ஔவையார் வந்து சேர்ந்தார். உடனே அப்பெண்டிர் அக்கவிதை மூதாட்டிக்கு நல்லமுதளித்து நீலநிற ஆடை

யும் அளித்தனராம். இதனைப்

> ''பாரி பறித்த பறியும் பழயனூர்க்
> காரி கொடுத்த கழைக்கோலும்—சேரமான்,
> வாரா யெனவழைத்த வார்த்தையு மிம்மூன்றும்
> நீலச்சிற் றுடைக்கு நேர்''

என்ற ஒளவையார் பாடலால் நாம் அறிகிறோம். பாரி வாரியளித்ததால் கெட்டதைக் கண்ட அம்மகளிர் அவன் கொள்கையைக் கைவிடவில்லை. ஏன்?. மக்கள் துயரைத் துடைப்பதற்கு அதைத்தவிர வேறு வழியில்லை. மக்கள் துயரை நாம் ஏன் துடைக்கவேண்டும்? நமது துயரை முதலில் துடைப்போம் என்று எண்ணுகிறவர்கள், தங்களைப் பற்றி மட்டும் கவலை கொள்வார்கள். பின் தங்கள் இன்பத்தைப் பெருக்க எண்ணுவார்கள். அவர்கட்கு ஆசை பெருகும். அப்பேராசையே உலகத் துன்பங்கட்கெல்லாம் காரணமாக அமையும். 'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்று ஆசிய சோதி புத்தர் அறிவிக்கவில்லையா?

நெடுஞ்செழியன் ஆசைப்பட்டானே, திருசேர்க்கும் நெறியில் சென்றானே, என்ன ஆயிற்று? உலகனைத்தும் சுடுகாடாயிற்று, பிணக்கோலத்தையே எங்கும் தன் காட்சியில் கண்டான். அவன் உள்ளங்கூட வெறிக்கோலங்கொண்டு தானே நின்றது. அவனும் வாழவில்லை. உலகையும் வாழ விடவில்லை. அவன் நாட்டிலும் பகைவர் நாட்டிலும் கைம்பெண்டிரைத்தான் கண்டான்; காதலர்களோடு மக்கள் வாழ்வதைக் காண இயலவில்லை. இதைத்தானே கல்லாடர் தமது கருத்துருக்கும் காட்சியில் விண்டுரைத்தார்.

இவ்வாறு ஆசையால் உலகம் அழிவதை நன்குணர்கின்ற காட்சியவர் தெள்ளியராகவே முயல்கின்றனர். அவர்கள் திருசேர்க்கும் நெறியை விடுத்து அன்பு சேர்க்கும் நெறியில் சென்று கொண்டிருக்கின்றனர். ஆனால் ஆசை கொண்டோர் அவ்வற நெறியை விடுத்து மற நெறியில்

சென்று கொண்டிருக்கின்றனர். போராட்டம் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது.

இவ்விரண்டு நெறியில் எந்த நெறியில் மக்கள் சேர்கிறார்களோ? எவ்வணியில் மக்கள் திரள்கிறார்களோ? அந்நெறியே வெல்லும். ஒரு நெறி அழிவைத் தருகிறது, மற்றது வாழ்வைத் தருகிறது. சாகும்போது கூட மனிதன் வாழவே விரும்புகிறான். எனவே சமுதாயம் வாழவே விரும்பும். தனது ஒவ்வொரு மூச்சையும் அதற்கே செலவழிக்கும். மக்கள் இவ்வாறு தெள்ளிய நெறியில் திரளும்போதுதான் அறம் வெல்கிறது; மறம் (பாவம்) நலிகிறது, அழிகிறது.

உலகில் இருவழிகள் உள்ளன என்று அறிவித்த வள்ளுவர், ''தெள்ளியர் ஆகும் வழியில்தான் மக்கள் செல்லவேண்டும். ஆக்கந்தரும் அந்நெறி வெல்வதற்காக சாவையும் நாம் தழுவ அஞ்சல் ஆகாது'' என்ற கருத்தை,

''ஒப்புரவி னல்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து''

குறள் 220

என்ற குறளிலும். அத்தெள்ளியோர்வழியில் மக்கள் ஒழுகினால்தான் உலகம் வாழும் என்ற கருத்தை,

''பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அஃதின்றேல்—
மண்புக்கு மாய்வது மன்''

குறள் 996

என்ற குறளிலும் கூறுகிறார். ஆகையால் நாம் தெள்ளியோர் ஆகும் நெறியில் நடப்போமாக.

மதுரைத் தமிழ்ச் சங்கத்
தனித் தமிழ்த் தேர்வுகள் 1960

பின்வரும் மாணவர்கள் கீழ்க்கண்ட தேர்வுகளில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வகுப்புக்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

புலவர் நுழைவுத் தேர்வு

முதல் வகுப்பு:

90 — ம. மு. இராமகிருஷ்ணன் } செந்தமிழ்க் கல்லூரி மதுரை.

இரண்டாவது வகுப்பு:

91 — T. சீனிவாசன்
92 — R. இராமச்சந்திரன்
95 — S. தனலெட்சுமி
} செந்தமிழ்க் கல்லூரி மதுரை.

மூன்ருவது வகுப்பு:

4 — ஜே. ஜோசுவா
6 — என். லிஸிநவமணி
13 — எம். மேரிஜாய்
} மே/பா. வித்வான். ம. தாமஸ் வடக்குத்தெரு, நெய்யூர் குமரி மாவட்டம்.

94 — C. செல்வராசன்
96 — லலிதா
97 — S. ஜெயலெட்சுமி
98 — சாந்தா தாயம்மாள்
} மே/பா செந்தமிழ்க்கல்லூரி மதுரைத் தமிழ்ச்சங்கம் மதுரை.

இளம் புலவர் தேர்வு

முதல் வகுப்பு:— இல்லை.

இரண்டாவது வகுப்பு:

101 —	ஆ. சண்முகம்	செந்தமிழ்க் கல்லூரி மதுரை.

மூன்ருவது வகுப்பு:

14	சி. கனகசபை	மே/பா. வித்வான். ம. தாமஸ் வடக்குத்தெரு நெய்யூர் குமரி மாவட்டம்.
15	வை. தங்கமணி	
21	சூ. சேசுஐயா	
36	இரா. செல்லப்பன்	
37	S. தங்கராஜ்	
39	C. ஸ்டெல்லா ஹெப்சிபா	
40	V. மாரியம்மாள்	
43	A. சொர்ணபாய்	
44	ஆ. கிரேஸ்	
45	அ. இரமணி	
48	V. லில்லிபாய்	
49	ம. மாரியசெல்வம்	
54	W. விரோணிக்கம்	
55	தே.மார்க்கிரேட்மேரி	
24	A. பாக்கியம்	மே/பா. K. R. சுவாமி முதல்வர் செந்தமிழ்க் கல்வி நிலையம் ஆற்றூர் P.O. குமரி அஞ்சல்.
26	S. சுலோசனபாய்	
28	C. டெய்ஸி பெபல்ரோஸ்	
29	N. லட்சுமி	
31	R. புஸ்பம்	
32	K. கோசலை	
34	P. ரூஸ்வெல்டுலீஜ்	
16	இரா, ப. சிதம்பரம்	B. துரிஞ்சிப்பட்டி (வழி) பொம்மிடி.

23	சு. இராசேந்திரன்	1/39, திருவாடானை முகவை மாவட்டம்
59	வே. கந்தையாபிள்ளை	சிக்கல் முதுகுளத்தூர் முகவை மாவட்டம்
100	ஈசுவரன்	செந்தமிழ்க் கல்லூரி மதுரை.
102	சு. சிதம்பரம்	
103	பழநிசிங்காரவேலு	
104	அ. அ. பஃசீர்	
105	கஸ்தூரி	
106	பார்வதி	
107	வைரம்	
108	ஒச்சம்மாள் முத்துக்கனி	
109	பழநியம்மாள்	
110	சீதாலெட்சுமி	
111	ஞானும்பிகை	
112	புஸ்பம்	
114	மீனட்சி	

புலவர் தேர்வு

முதல் வகுப்பு:

63	சி. இராஜகோபாலன்	வெவலூர் P.O. மணப்பாரை.
76	மு. சுந்தரேசன்	S. B. S. S. தமிழ்க்கல்லூரி மயிலம்.
84	R. முருகேசன்	

இரண்டாவது வகுப்பு:

66	ந. இராமமூர்த்தி	ஆதனூர் P.O. உளுந்தூர்பேட்டை (வழி) தெ. ஆ, மாவட்டம்.

69	கெ. கி. குப்புசாமி	S. B. S. S. தமிழ்க்கல்லூரி மயிலம்.
70	இ. நாராயணசாமி	
71	க. தட்சிஞமூர்த்தி	
73	செ. சிவசுப்பிரமணியன்	
78	வ. கண்ணப்பன்	
79	K. செந்தாமரைக் கண்ணன்	
83	P. முருகேசன்	
89	சு. சடாட்சரம்	
115	மரா. கோமதிநாயகம்	செந்தமிழ்க்கல்லூரி மதுரை.
116	ம. முத்துச்சாமி	
117	பெ. இராசகோபால்	

மூன்றுவது வகுப்பு:

62	கோ. இராமர்பாண்டியன்	தலைவன்கோட்டை (வழி) சங்கரன்கோவில்
72	துரை. சு. நாராயணமூர்த்தி	S. B. S. S. தமிழ்க்கல்லூரி மயிலம்.
74	சி. கனகசபாபதி	
75	ந. கிருட்டிணசாமி	
77	சி. இராமச்சந்திரன்	
80	கொ. இராமச்சந்திரன்	
81	க. அ. கிருஷ்ணன்	
82	கு. முனியன்	
85	பொ. சண்முகசுந்தரம்	
86	A. மேரிராசகுமாரி	
88	ஜே. சாந்தாபாய்	
118	K. K. குமாரசாமி	செந்தமிழ்க்கல்லூரி மதுரை.
119	இ. ப. நடராசன்	

தமிழ்ச்சங்கம், மதுரை

செயலாளர்
20—6—60

செந்தமிழ்க்கல்லூரி மாணவர்கள் தேர்வின் முடிவுகள்

இவ்யாண்டு (1960) ஏப்பிரலில் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் நடைபெற்ற தமிழ் வித்துவான் புகுமுகம், முதனிலை, இறுதிநிலை ஆகிய வகுப்புத் தேர்வுகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்கள் விபரம்

	தேர்விற் குச்சென் றவர்கள்	தேறியவர்கள்	இரண்டாம் வகுப்பு	மூன்றாம் வகுப்பு
புகுமுகம் (Entrance)	14	10	—	—
முதனிலை (Preliminary)	30	28	4	24
இறுதிநிலை (Final)	7	6	5	1
ஆகக்கூடுதல்	51	44	9	25

தமிழ்ச்சங்கம்
மதுரை
21—6—60

செயலாளர்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	—	0	3	0
31.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் ''செந்தமிழ்'' இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகி யிருக்கின்றன இவற்றுள் 1. 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 சிங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழி தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A.. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.